<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – நெடுஞ்சாலைத்துறை – கோவை (நெடுஞ்சாலை) கோட்டம் – திருப்பூர் (நெடுஞ்சாலை) உட்கோட்டம் மற்றும் திருப்பூர் சிறப்பு உட்கோட்டம் ஆகியவற்றினை திருப்பூர் வடக்கு உட்கோட்டம் மற்றும் தெற்கு உட்கோட்டம் என பெயர் மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்கே3) துறை

அரசு ஆணை ( நிலை ) எண். 230

நாள் 27–11–2009
கார்த்திகை மாதம் 18,
திருவள்ளுவராண்டு 2040
<u>படிக்கவும்</u>

தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கடித எண். 25023/நிர் 2(2)/64 நாள் 11–08–2009

------

**<u>ஆணை:</u>**

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று கோவை (நெடுஞ்சாலை) கோட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் (i) திருப்பூர் உட்கோட்டம் மற்றும் (ii) திருப்பூர் சிறப்பு உட்கோட்டம் ஆகிய இரு உட்கோட்டங்களின் பணிகளை ஒருங்கிணைத்து முறைப்படுத்தும் வகையில்

(i) திருப்பூர் (நெடுஞ்சாலை) உட்கோட்டத்தை திருப்பூர் (நெடுஞ்சாலை) வடக்கு கோட்டம் எனவும்,
(ii) திருப்பூர் (நெடுஞ்சாலை) சிறப்பு உட்கோட்டத்தை திருப்பூர் (நெடுஞ்சாலை) தெற்கு உட்கோட்டம் எனவும்
(iii) திருப்பூர் (நெடுஞ்சாலை) பிரிவினை திருப்பூர் (நெடுஞ்சாலை) வடக்குப் பிரிவு எனவும்
(iv) திருப்பூர் (நெடுஞ்சாலை) சிறப்பு பிரிவினை திருப்பூர் (நெடுஞ்சாலை) தெற்கு பிரிவு என பெயர் மாற்றம் செய்து அவற்றின் கீழ் வரும் சாலைகளை கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளித்தும் ஆணையிடுகிறது.

| வ. எண் | உட்கோட்டம் | மாநிலச் சாலைகள் | மாவட்ட முக்கிய சாலைகள் | மாவட்ட இதர சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | கி.மீ | கி.மீ | கி.மீ | கி.மீ |
| 1 | திருப்பூர் (நெ) வடக்கு உட்கோட்டம் | 36.40 | 34.40 | 88.80 | 159.60 |
| 2 | திருப்பூர் (நெ) தெற்கு உட்கோட்டம் | 47.20 | 39.20 | 84.99 | 171.39 |
| | மொத்தம் | 83.60 | 73.60 | 173.79 | 330.99 |

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5
மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாவட்டம்,
மாவட்ட ஆட்சியர், கோவை மாவட்டம்,
மாவட்ட கருவூல அலுவலர்கள் திருப்பூர் மற்றும் கோவை
மாண்புமிகு அமைச்சர் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்.
செயலரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

(கா. எழிலரசு)

அரசு சார்புச் செயலாளர்

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் கோவை கோட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் திருப்பூர் உட்கோட்டம் மற்றும் திருப்பூர் சிறப்பு உட்கோட்டம் ஆகியவற்றினை திருப்பூர் வடக்கு மற்றும் திருப்பூர் தெற்கு உட்கோட்டம் என்றும் அவ்உட்கோட்டங்களின் கீழ் செயல்படும் திருப்பூர் (நெடுஞ்சாலை) பிரிவு மற்றும் திருப்பூர் (நெடுஞ்சாலை) சிறப்புப் பிரிவு ஆகியவற்றை முறையே திருப்பூர் (நெடுஞ்சாலை) வடக்குப் பிரிவு மற்றும் திருப்பூர் (நெடுஞ்சாலை) தெற்குப் பிரிவு என பெயர் மாற்றம் செய்து ஆணையிடுமாறும் அவற்றின் எல்லைகளை வரைமுறை செய்யவும் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ. எண் | தற்போதுள்ள அலுவலகம் | பெயர் மாற்றம் செய்ய வேண்டியது | சாலையி |
|---|---|---|---|
| 1 | திருப்பூர் (நெடுஞ்சாலை) உட்கோட்டம் | திருப்பூர் (நெடுஞ்சாலை) வடக்கு உட்கோட்டம் | 159.60 கி.மீ |
| 2 | திருப்பூர் (நெடுஞ்சாலை) பிரிவு | திருப்பூர் (நெடுஞ்சாலை) வடக்கு பிரிவு | |
| 3 | திருப்பூர் (நெடுஞ்சாலை) சிறப்பு உட்கோட்டம் | திருப்பூர் (நெடுஞ்சாலை) தெற்கு உட்கோட்டம் | 171.39 கி.மீ |
| 4 | திருப்பூர் (நெடுஞ்சாலை) பிரிவு | திருப்பூர் (நெடுஞ்சாலை) தெற்கு பிரிவு | |

<u>நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்(எச்.கே.3) துறை</u>

## சுற்றாணைக் குறிப்பு

இக்கோப்பு நெடுஞ்சாலைத் துறையில் கோவை கோட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் திருப்பூர் உட்கோட்டம் மற்றும் திருப்பூர் சிறப்பு உட்கோட்டம் ஆகியவற்றினை திருப்பூர் வடக்கு மற்றும் திருப்பூர் தெற்கு உட்கோட்டம் எனவும் அவற்றின் கீழ் செயல்படும் பிரிவுகளை முறையே திருப்பூர் வடக்கு பிரிவு மற்றும் திருப்பூர் தெற்கு பிரிவு என பெயர் மாற்றம் செய்தல் குறித்ததாகும்.

2. தலைமைப் பொறியாளர் (பொது) தனது கடிதத்தில் கோவை நெடுஞ்சாலை கோட்டத்தின் கீழ், திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு நெடுஞ்சாலை உட்கோட்டம், மற்றும் சிறப்பு உட்கோட்டம் என இரு உட்கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும் இந்த இரு உட்கோட்டங்களின் பணிகளை ஒருங்கிணைத்து முறைப்படுத்தும் விதமாக திருப்பூர் (நெ) உட்கோட்டம் மற்றும் திருப்பூர் (நெ) சிறப்பு உட்கோட்டம் மற்றும் அவற்றின் கீழ்வரும் பிரிவுகளையும் கீழ்க்கண்டவாறு பெயர் மாற்றம் செய்யலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

| வ. எண் | தற்போதுள்ள அலுவலகம் | பெயர் மாற்றம் செய்ய வேண்டியது |
|---|---|---|
| 1 | திருப்பூர் (நெ) உட்கோட்டம் | திருப்பூர் (நெ) வடக்கு உட்கோட்டம் |
| 2 | திருப்பூர் (நெ) பிரிவு | திருப்பூர் (நெ) வடக்கு பிரிவு |
| 3 | திருப்பூர் (நெ) சிறப்பு உட்கோட்டம் | திருப்பூர் (நெ) தெற்கு உட்கோட்டம் |
| 4 | திருப்பூர் (நெ) சிறப்பு பிரிவு | திருப்பூர் (நெ) தெற்கு பிரிவு |

3. தலைமைப் பொறியாளர் (பொது) மேலும் தெரிவிக்கையில் திருப்பூர் (நெ) உட்கோட்டத்தால் பராமரிக்கப்படும் சாலைகள் விவரம் மாநில நெடுஞ்சாலைகள் நீளம் 83.60 கி.மீ. என்றும், மாவட்ட முக்கிய சாலைகள் நீளம் 73.60 கி.மீ. என்றும், மாவட்ட இதர சாலைகள் நீளம் 173.79 கி.மீ என்றும் ஆக மொத்தம் 330.99 கி.மீ நீள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் மேற்காணும் மொத்த சாலைகளை திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு உட்கோட்டங்களுக்கு பின்வருமாறு பகிர்ந்தளிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

| வ.எண் | உட்கோட்டம் | மாநிலச் சாலைகள் | மாவட்ட முக்கிய சாலைகள் | மாவட்ட இதர சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | கி.மீ | கி.மீ | கி.மீ | கி.மீ |
| 1 | திருப்பூர் (நெ) வடக்கு உட்கோட்டம் | 36.40 | 34.40 | 88.80 | 159.60 |
| 2 | திருப்பூர் (நெ) தெற்கு உட்கோட்டம் | 47.20 | 39.20 | 84.99 | 171.39 |
| | மொத்தம் | 83.60 | 73.60 | 173.60 | 330.60 |

தற்போது செயல்பட்டுவரும் நிரந்தர உட்கோட்டம், சிறப்பு உட்கோட்டம் மற்றும் அதனைச் சார்ந்த பிரிவு அலுவலகங்களில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களில் மாறுதல் ஏதுமில்லை தெரிவித்து திருப்பூரை

தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் நிரந்தர உட்கோட்டம் மற்றும் சிறப்பு உட்கோட்டம் ஆகியவவற்றினை திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு உட்கோட்டம் என பெயர் மாற்றம் செய்யவும் இவ்விரு உட்கோட்டங்களுக்கும் உட்கோட்ட எல்லைகளை வரைமுறை செய்யவும் ஆணையிடுமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் செயற்குறிப்பை ஆய்வு செய்து அதனை ஏற்று கோவை கோட்டத்தின் கீழ் இயங்கி வரும் திருப்பூர் உட்கோட்டம் மற்றும் திருப்பூர் சிறப்பு உட்கோட்டம் ஆகியவற்றை நிர்வாக வசதிக்காக திருப்பூர் வடக்கு உட்கோட்டம் மற்றும் திருப்பூர் தெற்கு உட்கோட்டம் எனவும் அவற்றின் கீழ் செயல்படும் பிரிவுகளை முறையே திருப்பூர் வடக்கு பிரிவு மற்றும் திருப்பூர் தெற்கு பிரிவு என பெயர் மாற்றம் செய்து ஆணையிடலாம் என இத்துறை கருதுகிறது.

5. முன்பக்கம் 5 பத்தி 4–ல் உள்ள இத்துறையின் கருத்துரு மீது ஆணை வேண்டி கோப்பினை மாண்புமிகு அமைச்சர் நெடுஞ்சாலை (மற்றும்) சிறுதுறைமுகங்கள் துறை அவர்களுக்குச் சுற்றனுப்பலாம்.

(வே. மணிவண்ணன்)
பிரிவு அலுவலர்

(கா. எழிலரசு)
சார்புச் செயலாளர்

(நா. அசோக்குமார்)
துணைச் செயலாளர்.

(கோ. சந்தானம்)
அரசு செயலாளர்.

அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்)

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.கே.3) துறை

பொருள்: பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – கோவை (நெ) கோட்டம் – திருப்பூர் (நெ) உட்கோட்டம் மற்றும் திருப்பூர் சிறப்பு உட்கோட்டம் ஆகியவற்றினை திருப்பூர் வடக்கு உட்கோட்டம் மற்றும் தெற்கு உட்கோட்டம் என பெயர் மாற்றம் செய்தல் – சம்பந்தமாக.

பார்வை: தலைமைப் பொறியாளர் (பொது) கடித எண். 25023/நிர்2(2).09/1 நாள் 11/08/2009

-----

இக்கோப்பு நெடுஞ்சாலைத் துறையில் கோவை கோட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் திருப்பூர் உட்கோட்டம் மற்றும் திருப்பூர் சிறப்பு உட்கோட்டம் ஆகியவற்றினை திருப்பூர் வடக்கு மற்றும் திருப்பூர் தெற்கு உட்கோட்டமாக பெயர் மாற்றம் செய்தல் குறித்ததாகும்.

6. தலைமைப் பொறியாளர் (பொது) தனது கடிதத்தில் கோவை நெடுஞ்சாலை கோட்டத்தின் கீழ், திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு நெடுஞ்சாலை உட்கோட்டம், மற்றும் சிறப்பு உட்கோட்டம் என இரு உட்கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும் இந்த இரு உட்கோட்டங்களின் பணிகளை ஒருங்கிணைத்து முறைப்படுத்தும் விதமாக திருப்பூர் (நெ) உட்கோட்டம் மற்றும் திருப்பூர் (நெ) சிறப்பு உட்கோட்டம் மற்றும் அதன் பிரிவுகளையும் கீழ்க்கண்டவாறு பெயர் மாற்றம் செய்யலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

| வ. எண் | தற்போதுள்ள அலுவலகம் | பெயர் மாற்றம் செய்ய வேண்டியது |
|---|---|---|
| 1 | திருப்பூர் (நெ) உட்கோட்டம் | திருப்பூர் (நெ) வடக்கு உட்கோட்டம் |
| 2 | திருப்பூர் (நெ) பிரிவு | திருப்பூர் (நெ) வடக்கு பிரிவு |
| 3 | திருப்பூர் (நெ) சிறப்பு உட்கோட்டம் | திருப்பூர் (நெ) தெற்கு உட்கோட்டம் |
| 4 | திருப்பூர் (நெ) சிறப்பு பிரிவு | திருப்பூர் (நெ) தெற்கு பிரிவு |

7. தலைமைப் பொறியாளர் (பொது) மேலும் தெரிவிக்கையில் திருப்பூர் (நெ) உட்கோட்டத்தால் பராமரிக்கப்படும் சாலைகள் விவரம் மாநில நெடுஞ்சாலைகள் நீளம் **83.60** கி.மீ. என்றும், மாவட்ட முக்கிய சாலைகள் நீளம் **73.60** கி.மீ. என்றும், மாவட்ட இதர சாலைகள் நீளம் **173.79** கி.மீ என்றும் ஆக மொத்தம் **330.99** கி.மீ நீள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் மேற்காணும் மொத்த சாலைகளை திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு உட்கோட்டங்களுக்கு பின்வருமாறு பகிர்ந்தளிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

| வ.எண் | உட்கோட்டம் | மாநிலச் சாலைகள் | மாவட்ட முக்கிய | மாவட்ட இதர | மொத்தம் |
|---|---|---|---|---|---|

| | | | சாலைகள் | சாலைகள் | |
|---|---|---|---|---|---|
| | | கி.மீ | கி.மீ | கி.மீ | கி.மீ |
| 1 | திருப்பூர் (நெ) வடக்கு உட்கோட்டம் | 36.40 | 34.40 | 88.80 | 159.60 |
| 2 | திருப்பூர் (நெ) தெற்கு உட்கோட்டம் | 47.20 | 39.20 | 84.99 | 171.39 |
| | மொத்தம் | 83.60 | 73.60 | 173.60 | 330.60 |

தற்போது செயல்பட்டுவரும் நிரந்தர உட்கோட்டம், சிறப்பு உட்கோட்டம் மற்றும் அதனைச் சார்ந்த பிரிவு அலுவலகங்களில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களில் மாறுதல் ஏதுமில்லை என தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

8. திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் நிரந்தர உட்கோட்டம் மற்றும் சிறப்பு உட்கோட்டம் ஆகியவவற்றினை திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு உட்கோட்டம் என பெயர் மாற்றம் செய்யவும் இவ்விரு உட்கோட்டங்களுக்கும் உட்கோட்ட எல்லைகளை வரைமுறை செய்யவும் ஆணையிடுமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

9. திருப்பூர் புதிய மாவட்டமாக உருவாக்கியுள்ளதால் திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு கோட்டம் ஒன்று உருவாக்கும் செயற்குறிப்பு கோப்பு எண். 12884/எச்.கே.3/09–ல் ஆய்வு செய்யப்பட்டு நிதித்துறையின் குறிப்பு வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. புதியதாக உருவாக உள்ள திருப்பூர் கோட்டத்தின் கீழ் திருப்பூர் உட்கோட்டம் மற்றும் திருப்பூர் சிறப்பு உட்கோட்டங்கள் செயல்படும். தற்போது தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் திருப்பூர் உட்கோட்டம் மற்றும் சிறப்பு உட்கோட்டம் ஆகியவற்றையும் அவற்றின் கீழ் வரும் பிரிவுகளையும் முறையே திருப்பூர் வடக்கு உட்கோட்டம் மற்றும் திருப்பூர் தெற்கு உட்கோட்டம் என பெயர் மாற்றம் செய்யும் ஆணையிட கோரிக்கையை ஏற்கலாமா என்பதற்கு ஆணை வேண்டப்படுகிறது.

10. ஆணைக்குப்பின் குறிப்புவேண்டி கோப்பினை நிதித்துறைக்கு அனுப்பலாம்.